> முதல் வருகைக்கு அப்பால் நோக்கும் நாம் இரண்டாம் வருகைக்குக் காத்திருக்கிறோம்.
>
> - எருசல சிரில்

இறைவன் பேசுவதில் நாம் ஆறுதல் கொள்கிறோம், ‘நான் தாவீதிலிருந்து நீதியின் தளிர் ஒன்று முளைக்கச் செய்வேன். அவர் நாட்டில் நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுவார்’ (33:15). இயேசு கிறிஸ்துவில் இந்த வாக்குறுதி நிறைவேறியது.

இயேசு வரலாற்றில் வந்தார், மறைபொருளாக வருகிறார், மாட்சியில் வருவார். நமது மீட்பரின் பிறப்புக்குத் தயாராகும் வேளையில், மற்றொன்றையும் நாம் எதிர்நோக்குகிறோம். அவரது வருகைக்குக் காத்திருக்கும் நாம், ‘வாரும் ஆண்டவரே வாரும்’ என கூக்குரலிட்டாலும், ‘ விளக்கோ மங்கி வருகிறது, இரவோ நீள்கிறது’. ஆயினும் **வந்தவர், மீண்டும் வருவார்** என மனதில் நம்பிக்கை கொள்கிறோம்.

இயேசுவின் இந்த மூன்று வருகை எனது வாழ்வை எவ்வாறு பாதிக்கும். எதிர்பார்ப்போடு காத்திருக்கும் எனக்கு என்னவாகும்?

‘இயேசு தம்முடைய தூயோர் அனைவரோடும் வரும்பொழுது, நம் தந்தையாம் கடவுள்முன் நீங்கள் குற்றமின்றித் தூய்மையாக இருக்குமாறு’ தெசலோனிக்கர்க்கு (3:13) எழுதிய கடிதத்தில் புனித பவுல் நம்மை நினைவுபடுத்துகிறார்.

நிறைவுள்ளவராக வர முடியாது என்பதை உணர்ந்த புனித லிசியொ திரேசா, புனிதத்தையும் கடவுளையும் நெருங்கும் எளிமையான வழியை முன்மொழிந்துள்ளார். குழந்தையாக வந்து பிறந்த கடவுளைக் கண்டு நாம் அச்சம் கொள்ள வேண்டியதில்லை என அவர் கூறுகிறார். எவ்வித எதிர்பார்ப்புமின்றி முழு நம்பிக்கையோடு தாயிடம் செல்லும் குழந்தையைப் போல் கடவுளிடம் அவர் செல்கிறார். கடவுளின் உள்ளம் தாய்மை உள்ளம் எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

‘அன்பில் வாழ்ந்து’ நாம் செய்யும் எல்லாவற்றிலும் கடவுளுக்கு ‘சாட்சியம் பகருவோம்’ என மகிழ்ந்து பேருவகை கொள்வோம் என்ற தமது சுற்றுமடலில் திருத்தந்தை பிரான்சிஸ் நம்மை அழைக்கிறார். ‘நமது சொந்த பாதையை மெய்யுணர்ந்து, மிகச் சிறந்தவற்றறை நம்மிடமிருந்து கொண்டு வருவோம்’. சரியான வாழ்வை நாம் வாழும் வழி (மீக்கா 6:8) எதிரொலிக்கிறது.

‘உன்னிடமிருந்து கடவுள் எதிர்பார்ப்பது எது என்றும் எது சரி என்றும் ஏற்கனவே உமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. உன் கடவுளோடு எளிமையாக நடந்து செல்வதற்கு, சரியானதைச் செய், தாராளமாக அன்பு செய். இதுவே போதுமானது. ✝

### வாரம் ஒரு வசனம்

**வந்தவர், மீண்டும் வருவார்**

INTERNAL CIRCULATION ONLY
BUL 48/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

2 டிசம்பர் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

திருவருகை காலம் முதல் ஞாயிறு

## எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

**கிறிஸ்துவே இன்றியமையாதப் பரிசு (கொடை)**

# நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்

# வந்தவரும் வரவிருப்பவரும் அவரே

‘அவரது வருகையால், கிறிஸ்து அனைத்தையும் புதியதாக்கினார்’ என்ற புனித இரானியஸ் வார்த்தையை நாம் நினைவுகூரும் வேளையில், எல்லாம் புதியது என்ற எண்ணத்தோடு புதிய திருவழிபாட்டு ஆண்டை தொடங்குகிறோம்.

புத்துயிரளிக்கும் நம்பிக்கையை, திருவருகையின் முதல் மெழுகுதிரி(ஊதா வண்ணம்) குறிக்கிறது. முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எரேமியா வழியாக



-

| | |
|---|---|
| **மினவுதல் மாதா தேவாலயம்**<br>85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்<br>தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542<br>தொ.நகல்: 06-767 7544<br>Email: serembanvisitaion@gmail.com<br>Website: www.visitationseremban.org<br>பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்<br>உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ | *2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*<br>***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***<br>*2018 டிசம்பர் (மார்கழி) மாதத்தின் கருப்பொருள்:*<br>***கிறிஸ்துவே இன்றியமையாத பரிசு (கொடை)***<br>**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**<br>**(1848 - 2018)** |

**<u>பங்கு அலுவலக நேரம்</u>**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**<u>இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்</u>: திருவருகைக்காலம் 1ஆம் ஞயிறு** சனி 01-12-2018 - ஞாயிறு 09-12-2018

எரே : 33: 14 - 16 தி.பா: 25: 4-5,8-9, 10, 14 1 தெச: 3: 12 - 4: 2 லூக்கா: 21: 25-28, 34-36

**"ஆண்டவரே உம்மை நோக்கி, என் உள்ளத்தை உயர்த்துகிறேன்" - திபா 25**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 01 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித மிக்கேல்) | காலை 8.30 - மாலை 5.00 வரை **சமூகத்தில் ஆன்மீக அனுபவம்**<br>மாலை 6.00 **கிறிஸ்தவ புகுமுக சகோதரர்களை ஏற்றுக்கொள்ளும் சடங்கு (ஆ)** |
| ஞாயிறு | 02 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித யூதா)<br>திருப்பலி (ஆ) (புனித பொஸ்கோ)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது (பாடசாலை விடுமுறை)**<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |
| திங்கள் | 03 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 04 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 05 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 06 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 07 | காலை திருப்பலி நடைபெறாது | | *மாலை 7.30 மணிக்கு திருமணி ஆராதனையும் திருப்பலியும் (முதல் வெள்ளிக்கிழமை)* |

**திருவருகைக்காலம் 2ஆம் ஞயிறு**

பாரூக் : 5: 1 - 9 தி.பா: 125: 1-2ab, 2cd-3, 4-5, 6 பிலி: 1: 3 - 6, 8 -11 லூக்கா: 3: 1-6

**"ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல்கள் புரிந்துள்ளார்" - திபா 125**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 08 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித 2ஆம் அருளப்பர் சின்னப்பர்) | |
| ஞாயிறு | 09 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித யோக்கிம்)<br>திருப்பலி (ஆ) (புனித புரூணோ)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது (பாடசாலை விடுமுறை)**<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

## <u>2018 *டிசம்பர் (மார்கழி) மாத செய்திகள் / நிகழ்வுகள்*</u>

1) பங்கு காணிக்கை:

24/25 நவம்பர் 2018 - ரிம: 9591.15

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**<u>2) சமூக அக்கறைப் பணிக்குழுவினருக்காக இன்று</u>**

இரண்டாவது காணிக்கை எடுக்கப்படும்.

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**<u>3) திருவழிபாட்டுப் பொருட்கள் விற்பனை</u>**

அ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி ரிம 6.00 ஒன்றின் விலை
ஆ) 2019 விவ்லிய நாட்குறிப்பு (ஆ/த) ரிம: 20.00 ஒன்றின் விலை

வாங்கி ஆதரவு தாருங்கள்

**<u>திருமண அருளடையாளக் கொண்டாட்டம்: வாழ்த்துகள்</u>**

அ) மேத்யு புட்டிகியெஜ் & ஜேன் யாவ் 07-12-2018 பகல் 3.30
ஆ) லிம் குவான் தெங் & அலிஸ் இங் ஷெங் மின் 08-12-208 காலை 11.00
இ) நிக்கோலஸ் பன்னீர் செல்வம் & சர்மினி ஹெக்15-12-2018 காலை 11.00

- **<u>170 ஆம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்</u>**: (கார்னர் ஸ்டோன் கா.ஃபி டேபிள் புத்தகம்) ரிம:40.00 திருப்பலிகளுக்குப் பின்னும் அல்லது பங்கு அலுவலகத்திலும் வாங்கிக் கொள்ளலாம்.
- **<u>ஆலய சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்காக</u>** உங்களிடமிருந்து நிதியை வரவேற்கிறோம். உங்களுடைய காசோலைகளை **Church of Visitation** என்ற பெயரில் எழுதவும். உங்களுடைய ஆதரவுக்கு மிக்க நன்றி.
- **<u>08 & 09 டிசம்பர் - பிஸ்கெட் மற்றும் சிற்றுண்டி விற்பனை:</u>** Flour Power' - அருட்சகோதரி பெர்த்தா மற்றும் அவரின் குழுவினர் (தாமான் பிரிமா அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் வசதி குறைந்த தாய்மார்கள் மற்றும் குழந்தைகள்) அவர்களுடைய செலவீனங்களுக்காக விற்பனை செய்ய வருகிறார்கள். வாங்கி ஆதரவு தாருங்கள்.
- **<u>ஸ்டைரோ.ஃபோம் - தடை சொல்லுங்கள்</u>**. - இதில் கொடுக்கப்படும் உணவை வாங்காதீர்கள். நீங்களும் கொடுக்காதீர்கள். நம் சுற்றுச்சூழலைப, இயற்கையைப் பாதுகாப்போம்
- **<u>வீடுகளில் இருக்கும் முதியோர் மற்றும் நோயாளிகளை</u>** அருட்தந்தையர்கள் கிறிஸ்மஸ் பெருவிழாவுக்கு முன் சந்திக்கவிருக்கிறார்கள். (18-21 டிசம்பர், 2018) உங்கள் இல்லங்களில் இருக்கும் முதியோர் நோயாளிகளின் பெயர்களை விரைவில் பங்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

இன்று திருப்பலியை வழி நடத்திய புனித யூதா ததேயு அதிச வினருக்கு நமது நன்றிகள்

- **<u>திருவருகைக்காலம்: வாக்குறுதியின் அடையாளமாக திருச்சபை மீண்டும் தொடங்குகின்றது</u>**
  - நம் இல்லத்திலும், உள்ளங்களிலும் கிறிஸ்து பிறக்க தாயார் செய்யும் தகுந்த காலம்
  - இவ்வுலகில் மகிழ்ச்சி, அமைதி, அன்பு, மற்றும் எதிர் நோக்கைக் கொண்டு வரும் காலம்
  - மகிழ்ச்சியின் ஞாயிறு - அதிச/சோன் அளவில் கிறிஸ்மஸ் பாடல்களை 15-12-2018 முதல் பாடி மகிழும் காலம்
  - கிறிஸ்மஸ் பாடல்கள் அனைத்து இல்லங்களிலும் பாடப்பட வேண்டும். பங்கு/அதிச வில் கலந்து கொள்பவர்களில் இல்லங்களுக்கு மட்டும் செல்லாமல், தொலைந்துபோன, கடைசியானோர், எளிமையானோர் மற்றும் சிறியோர் ஆகிய அனைவரின் இல்லங்களிலும் பாடப்பட வேண்டும். பங்கு அலுவலகத்தில் போலிஸ் அனுமதி கடிதத்தைப் பெற்றுக்கொள்ளவும்.
- **<u>ஏழைக் குடும்பங்களுக்கு உதவும் வகையில் உணவுப் பொருட்களை வழங்கமுன்வரவும்</u>** (அரிசி, சீனி, மாவு மற்றும் எண்ணெய்) பங்கு அலுவகலத்தில் ஒப்படைக்கவும்.
- **<u>சிறையில் இருப்போருக்கு கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகள்</u>**: உங்களுடைய வாழ்த்து அட்டைகளை எழுதி பங்கு அலுவலகத்தில் **10-12-2018**க்குள் (திங்கள்)ஒப்படைக்கவும். நீங்கள் எழுதும் வாழ்த்து அட்டைகளை **13-12-2018** (வியாழன்) சிறையில் சென்று சந்தித்து அவர்களிடம் வழங்கப்படும்.
- **<u>புற்று நோய்- உங்களுக்கு இதைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள விருப்பமா?</u>** லயன்ஸ் கிளப் ஏற்பாடு செய்யும் இதில் கலந்துகொள்ளுங்கள்: அனுமதி இலவசம்: மதிய உணவும் வ்ழங்கப்படும். நாள்: 08-12-2018 இடம்: மினவுதல் தேவாலய மண்டபம். நேரம்: காலை 8.30 - 12.30 வரை. குறைவான இடங்களே உள்ளதால் முதலில் வருவோருக்கே முன்னுரிமை. அனைத்து திருப்பலிகளுக்குப் பின்னும் பதிவு நடைபெறும்.. தொடர்பு: 012- 3327 **975 (2) 012 - 915 7377** (கிறிஸ்டினா)

- **<u>ஒய்வு பெற்ற பேராயர் மர்.ஃபி பாக்கியம் அவர்களின் 80 ஆண்டு பிறந்த நாள் கொண்டாட்டம்</u>**: திருப்பலி தொடர்ந்து விருந்து உபசரிப்பு 9-12-2018(ஞாயிறு) மாலை 6.00மணிக்கு கோலாலம்பூர் புனித யோவான் பேராலயத்தில் நடைபெறும் . அனைவரையும் இதில் கலந்துகொள்ள அழைக்கிறோம்.
- **<u>*ICCF* கிறிஸ்துவ சபைகளுக்கிடையே கிறிஸ்மஸ் விருந்துபசரிப்பு</u>**: 15-12-2018 - இடம்: மின் கோக் உணவு விடுதி. டிக்கெட்டுகள் விற்பனையில் உள்ளன. வாங்கி ஆதரவு தரவும்.
- **<u>புனித மேரி பாலர் பள்ளி- ஜலான் லீ சாம்</u>**(சீனோ ஆங்கிலப் பள்ளி வளாகத்தில்) பதிவு ஆரம்பமாகி விட்டது. தொடர்புக்கு: மரினா 019 244 6143 பள்ளி ஆசீர்வதிப்பு மற்றும் திறப்பு விழா 16-12-2018 பகல் 3.00 (ஞாயிறு)
- **<u>சிறைச்சாலைப் பணிக்குழுவுக்கு புதிய தன்னார்வலர்களை வரவேற்கிறோம்</u>**. - இதற்கான அறிமுகம் 16-12-2018 (ஞாயிறு) பகல் 2.00 - 4.00வரை நடைபெறும். - இடம்: விவிலிய அறை.
- **<u>மினவுதல் தேவாலய பீடப்பணியாளர்களின் முகாம்</u>**: 17-19 டிசம்பர் 2018 - இடம்: விசிடேஷன் செண்டர், ஜலான் லீ சாம். அனைத்து பீடப்பணியாளர்களும் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும். தொடர்பு: டேரல்:017- 263 2214
- **<u>குழந்தைகளுக்கான திருமுழுக்கு அருளடையாளம்</u>**: கிறிஸ்மஸ் நாள் அன்று 25-12-2018 வழங்கப்படும். உங்களுடைய விண்ணப்பங்களை பங்கு அலுவலகத்தில் 08-12-2018 க்குள் ஒப்படைக்கவும்.
- **<u>"சஹாபாட்" இளைஞர்களுக்கான சமூக கொண்டாட்ட நிகழ்வு</u>** ( புகழ்ச்சி, ஆராதனை, உருவாக்கப்பயிற்சி, ஆடல், பாடல்,- 4 மொழிகளில்) நாள்: 08-12-2018 - இடம்: அமல உற்பவ அன்னை ஆலயம். போர்ட்டிக்சன். அனைவரையும் வரவேற்கிறோம். குறைந்த கட்டணம்: ரிம:10/-

**<u>திருவருகைக் கால ஒப்புரவு அருளடையாளம் 2018</u>**

03-12-2018(திங்கள்) மாலை 7.30 - திருக்குடும்ப தேவாலயம், காஜாங
04-12-2018(செவ்) மாலை 7.30 - புனித மரிய வியான்னி, தம்பின்
05-12-2018(புதன்) இரவு 8.00 - பஹாவ், மரியா, இறைவனின் தாய் சிற்றாலயம்
06-12-2018(வியா) மாலை 7.30 - புனித அலோசியஸ் , மந்தின்
07-12-2018(வெள்) பகல் 12.30 - புனித யோவான் பேராலயம், கோலாலம்பூர்

**<u>கிறிஸ்துவ புகுமுக வேட்பாளர்களை ஏற்றுக்கொள்ளும் சடங்கு</u>:**
ஆங்கிலம் - 10
தமிழ் - 8
சீனம் - 8
தே.மோ - 4
இவர்கள் அனைவருக்கும் நம்முடைய வாழ்த்துகள்